பக்கங்கள் 17

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 01 ஞாயிற்றுக்கிழமை 17.12.2023 அதிர்வு 139

## கணவனுடன் முரண்பட்ட மனைவி உயிர்மாய்ப்பு!

### கோப்பாயில் சோகம்

(எஸ்.நிதர்ஷன்)

குடும்பத் தகராறு காரணமாக தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முயன்ற நிலையில்,

04

# சஜித் அணியுடன் இணையத் தயார்

### பீரிஸ் அதிரடி அறிவிப்பு



சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட எதிர்க்கட்சியைக் கட்டியெழுப் பவுள்ளேன் என்று டலஸ் அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறு கையில்,

"மிகவும் ஆபத்தான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத் துவதற்கு எதிராக மக்களைப் பாது காப்பதே எனது எதிர்பார்ப்பு.

04

# 'மொட்டு'வின் 25 எம்.பிக்கள் விரைவில் எதிரணிப் பக்கம்

### கொழும்பு அரசியலில் பரபரப்புத் தகவல்

ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணையத் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக் குள் இப்போது உட்கட்சி மோதல் வெடித்துள்ளது. இந்நிலையில், அந்தக் கட்சியைச் சேர்ந்த 25 எம். பிக்கள் விரைவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையத் தீர்மானித்துள்ளனர்.

அதன்பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி மிகவும் பலமிக்கக் கூட்டு எதிர்க்கட்சியாகச் செயற்படும்.

04







## யாழில் கார்த்திகை பூ செடியின் கிழங்கைச் சாப்பிட்டவர் மரணம்

(எஸ்.நிதர்ஷன்)

கார்த்திகைக் கிழங்கை உட்கொண்ட இளம் குடும்பஸ்தர் நோய்வாய்ப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

உடுத்துறையைச் சேர்ந்த மாரிமுத்து சுப்பிரமணியம் (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் சில தினங்களுக்கு முன்னர் கார்த்திகை பூ செடியின் கிழங்கை உட்கொண்ட நிலையில் , சுகவீனம் அடைந்துள்ளார். அதையடுத்து அவரை வீட்டார் பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரி ழந்துள்ளார்.

## கொழும்பில் தொலைபேசிக்காக இளைஞர் வெட்டிப் படுகொலை!



கொழும்பு, கிராண்ட் பாஸ் பொலிஸ் பிரிவில் இளைஞர் ஒருவர் வெட் டிப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த வன்முறைச் சம்ப வத்தில் சேதவத்த பிர தேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்களைக் கிராண்ட்பாஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கொழும்பு 14 மற்றும் வெல்லம்பிட்டி பிரதேசங்களைச் சேர்ந்த 18 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

04

# சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவில் வாளுடன் இளைஞன் கைது!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில் கண்ணன் கோவில் பகுதியில் நேற்று (16) சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் வாளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டுவில் பகுதியில் குழுவொன்று வாள்களுடன் வீதியில் நிற்பதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்ற நிலையில் அந்த இளைஞனை வாளுடன் கைது செய்துள்ளனர்.

வாள்களுடன் நின்ற ஏனையவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

21 வயதான இளைஞனைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேக நபர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் எனவும் தற்போது மட்டுவில் பகுதியில் திருமணம் செய்து வசித்து வருகிறார் என்றும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# உசன் மயானத்தில் கைக்குண்டு மீட்பு!

(த.சுபேசன்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உசன் பகுதியில் உள்ள மயானம் ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்தனர்.



# பங்கதெனிய வெஹரகெலே பகுதியில் வீடொன்றில் இளைஞன் சடலமாக மீட்பு!

(ரஸீன் ரஸ்மின்)

ஆராச்சிக்கட்டுவ - பங்கதெனிய வெஹரகெலே பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இளைஞர் ஒருவர் நேற்று (16) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காதில் இரண்டு 'ஹேண்ட்ஸ் ஃப்ரீயை' அணிந்து கொண்டு தூங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆராச்சிக்கட்டுவ - பங்கதெனிய வெஹரகல பகுதியைச் சேர்ந்த விஜய சூரிய குணவர்தன மஹவடுகே ஹசித் சந்தருவன் பெரேரா என்ற 21 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தந்தை மரக்கறி விவசாயத்தில் ஈடுபட்டு வருவதுடன், சடலமாக மீட்கப்பட்டவர் தனது உடன்பிறந்த சகோதரனுடன் இணைந்து வாகன விற்பனை செய்யும் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளார்.

சம்பவத் தினத்தன்று தாயும் தந்தையும் அதிகாலை மரக்கறிக் கொட்டைக்கு சென்றுள்ள நிலையில், காலை 7.30 மணி ஆகியும் இந்த இளைஞன் எழுந்திருக்காததால், மற்றைய சகோதரன் அவர் உறங்கிக் கொண்டிருந்த அறையின் கதவைத் தட்டி எழுப்பியுள்ளார்.



எனினும், தூக்கிக் கொண்டிருந்த சகோதரனிடமிருந்து எந்த பதிலும் கிடைக்காததால், சந்தேகமடைந்த சகோதரன், அறையின் பூட்டை உடைத்து உள்ளே சென்றார் என்று பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

பின்னர், வெளியே சென்ற பெற்றோர்களை வீட்டுக்கு அழைத்து, அயலவர்களின் உதவியுடன் இளைஞனை உடனடியாக சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் இளைஞன் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பின்பு, சடலம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதரகங்கள் நடத்திய போட்டிகளுக்குச் சான்றிதழ்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

2023 சிறுவர் தினத்தை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதரகங்கள் நடத்திய போட்டியில் பங்குபற்றி, நாடளாவிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பேச்சுகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டமைக்கான எஸ்.எம். திஹ்யா என்ற சாய்ந்தமருது அல்–ஹிலால் வித்தியாலய தரம் 3 மாணவ னுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

சக்தியைப் பாதுகாக்க, கழிவுகளைக் குறைக்க மற்றும் சூழலுக்கு இசைவான இல்லச் செயற்பாடுகளுக்கு பிள்ளைகளின் பங்களிப்பு எனும் தொனிப் பொருளை மையமாக வைத்து 10 வயதுக்கு உட்பட்டவர்களுக்குப் போட்டி நடத்தப்பட்டது.

பரிசளிப்பு நிகழ்வு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.




# கல்முனையில் இரத்ததான முகாம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அஸ்றப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி மற்றும் சமூக சேவை அமைப்பின் அனுசரணையில் ஓ.ஜீ. சமூக அமைப்பு மற்றும் நெக்ஸ்ட் ஜென் என்பன இணைந்து ஏற்பாடு செய் திருந்த இரத்ததான நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை (16) சாய்ந் தமருது அல் ஹிலால் வித்தியால யத்தில் இடம் பெற்றது.

'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்த இரத்ததான முகா மில் கல்முனை அஸ்றப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள், ஓ.ஜீ. சமூக சேவை மற்றும் நெக்ஸ்ட் ஜென் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் குருதிக் கொடையாளிகள் கலந்து கொண்டனர்.



# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கூட்டம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் செயற்பாடுகள் தொடர்பில் மாவட்ட அலுவலகத்தில் இன்று கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தற்போதைய திட்டங்கள் தொடர்பிலும், எதிர்காலத் திட்டச் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடல் இடம்பெற்றது. மேற்படி சந்திப்பில் மாவட்ட கிளைத் தலைவர் எஸ்.குகதாஸன், பொருளாளர் வெள்ளத்தம்பி சுரேஷ், முன்னாள் நகர சபைத் தலைவர் கே.செல்வராஜா மற்றும் கட்சியின் உறுப்பினர்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்புக்குப் புதிய அரச அதிபர்; கடமைகளை நாளை பொறுப்பேற்கிறார்!

**(அபு அலா)**

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் (15) சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர், அவரின் சேவைகளை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான இவர், கிழக்கு மாகாண பல்வேறு திணைக்களங்களில் பல பதவிகளை வகித்து, பின்னர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த நிலையில் இவருக்கான நியமனக் கடிதத்தை பிரதமர் தினேஷ் குணவர்த்தன கடந்த 14 ஆம் திகதி வழங்கினார்.

மட்டக்ளப்பு மாவட்ட அரச அதிபராக கடமையாற்றிய திருமதி கலாமதி பத்மராஜா ஓய்வு நிலைக்குச் சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டார்.



புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி ஜே.ஜே.முரளிதரன் தனது கடமைகளை நாளை திங்கட்கிழமை (18) காலை 8.30 மணியளவில் பொறுப்பேற்கவுள்ளார்.

## சஜித் அணியுடன்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அதற்காக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட எதிர்க்கட்சியைக் கட்டியெழுப்பத் தீர்மானித்துள்ளேன்.

ஆழமாகச் சிந்தித்தே இந்தத் தீர்மானத்தை நான் எடுத்துள்ளேன்."

## 'மொட்டு'வின்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக – கூட்டு எதிர்க்கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது." – என்றார்.

## கணவனுடன்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 41 வயதான பெண்ணே உயிரிழந்தார்.

கடந்த 07ஆம் திகதி மது போதையில் வீட்டுக்கு வந்த கணவர், மனைவியுடன் முரண்பட்டார். பின்னர் கணவன் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றார். கணவன் மீண்டும் வீட்டுக்குத் திரும்பியபோது, மனைவி தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்க முயன்றார். அவர் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று (16) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## கொழும்பில்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கொலையைச் செய்த சந்தேகநபர்கள், உயிரிழந்தவரிடம் கையடக்கத் தொலைபேசியைக் கேட்டபோது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது கையடக்கத் தொலைபேசியை வைத்திருந்தவரை சந்தேகநபர்கள் கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தார் ஐ.நா. இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி

**(அப்துல்சலாம் யாசீம், எஸ். கீதபொன்கலன்)**

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ரே கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானைச் சந்தித்தார்.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரே தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் இனங்களுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



# ‘50 எழுத்து ஆளுமைகள்’ நூல் அறிமுக நிகழ்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் 50 எழுத்து ஆளுமைகள் எனும் நூல் அறிமுக விழா கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை (16) மாலை நடைபெற்றது.

பேராசிரியர் சபா ஜெயராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளர்கள், கவிஞர்கள், அரசியல் பிரமுகர்கள், நூல் ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், பத்திரிகை பிரதம ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நோகாமல் நொங்கு குடிக்கும் முயற்சி

பொருளாதாரத்தில் பெருவீழ்ச்சி கண்டிருக்கும் நாடு, தன்னைச் சுதாகரித்து நிலை நிறுத்துவதற்கு அந்நிய செலாவணியைத் தேடி அலைகின்றது.

அந்நிய செலாவணியை எட்டுவதற்கான எல்லா வாய்ப்புகளையும் அது நாடுகின்றது. சாதகமான எல்லாக் கதவுகளையும் தேடி அது தட்டுகின்றது என்பது உண்மைதான்.

ஆனால் அந்நிய செலாவணியைப் பெருமளவில் ஈட்டக்கூடிய ஒரு துறையை நாடு சரிவரக் கையாளவே இல்லை என்று இப்போது சுட்டிக் காட்டப்படுகின்றது. அதனை உலக வங்கியும் தனது அறிக்கையில் வெளிப்படுத்தி உள்ளது.

நிதி மூலப் பற்றாக்குறையால் தடுமாறும் இலங்கை நாடு, அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கான முக்கிய ஆதாரமாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களை இவ்விடயத்தில் ஊக்குவித்து வருகின்றது.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்று, அதில் ஈடுபடுவதற்கு இலங்கையர்களை ஊக்குவித்தால் அவர்களின் உழைப்பு நாட்டுக்கு அந்நிய செலாவணியாக வந்து சேரும் என்பதே இந்தத் திட்டத்தின் அடிப்படை. இது சாத்தியமான ஒரு முறையாக அரசினால் கையாளப்படுகின்றது.

ஒரு பக்கம் நாட்டின் மூளைசாலிகள் - புத்திஜீவிகள் - அறிவார்ந்த சமூகத்தினர் - நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர் என்ற ஆட்சேபம் - எதிர்ப்பு - கண்டனக் குரல் - பல பக்கங்களில் இருந்தும் பரவலாக எழுகின்ற போதும், அதைப் பொருட்படுத்தாமல் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தேடி இலங்கையர்கள் செல்வதை ஊக்குவிக்கும் பணியும் அரசினால் முழுமூச்சாக முன்னெடுக்கப்பட்டே வருகின்றது.

அரச ஊழியர்களைக் கூட இவ்வாறு வெளிநாட்டிற்குச் சென்று அந்நிய செலவாணியை சம்பாதித்து வர ஊக்குவித்து, வாய்ப்பளிக்கும் விதத்தில் அவர்களுக்கு ஐந்து வருட காலம் சம்பளமற்ற விடுமுறை வழங்கும் திட்டம் அரச ஏற்பாடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை கவனிக்கத்தக்கது.

ஆனால் இவ்வாறு வெளிநாட்டுக்கு இலங்கையர்களைப் பணிக்கு அனுப்பி, அந்நிய செலாவணியை ஈட்டும் திட்டம் கூட நிபுணத்துவமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்று குறை கூறப்படுகின்றது.

வெறுமனே வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் தொட்டாட்டு வேலைகளுக்கு இலங்கையர் அனுப்பப்படுகின்றார்கள். அந்த வேலைகளுக்கு முன் பயிற்சி, தொழில் பயிற்சி தேவை இல்லை. ஆனால் அத்துறையினரால் அதிக அந்நிய செலவாணியை ஈட்ட முடியாது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான தேவை ஸ்திரமாக - அதிகமாக - உள்ளது. ஆனால் நாட்டினால் வழங்கப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை மிக மிக சொற்பமாக உள்ளது என உலக வங்கி சுட்டிக்காட்டி உள்ளது.

அதாவது தேவைக்கும் வழங்கலுக்கும் இடையில் பாரிய வேறுபாடு உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை வெளிநாட்டில் ஏழு லட்சம் வேலை வாய்ப்புகளுக்கான காலியிடங்கள் உள்ளன. ஆனால் அதில் ஐந்து சதவீதத்தை மட்டுமே இலங்கையால் நிரப்ப முடிகின்றது என்று சுட்டுகின்றது முக்கிய அறிக்கை ஒன்று.

இந்த நிலைமைக்குக் காரணம் அந்த வேலை வாய்ப்புக்குத் தேவையான தொழில்பயிற்சித் தகுதி கொண்டவர்கள் இலங்கையில் வெளிநாட்டுப் பணிக்குத் தயாராக இல்லை என்பதுதான்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடுபவர்களை அணிதிரட்டி, அவர்களின் தகுதி, திறமைகளை அடையாளம் கண்டு, உரிய பயிற்சிகளை குறுகிய காலத்தில் வழங்கி, அவர்களைத் தயார் படுத்தினால் இந்த வெற்றிடங்களை இலகுவாக நிரப்பி, அந்நிய செலவாணியை அதிகளவில் ஈட்டி கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், நமது நாடும் அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் நோகாமல் நொங்கு குடிக்க மட்டுமே தயாராக இருக்கின்றனர். அதனால் அந்த வாய்ப்புகளும் பயனற்றுப் போவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

# யான்ஓயா, பதவியா நீர் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய்- யான்ஓயா மற்றும் பதவியா நீர் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது .

இதன் அடிப்படையில் இன்று (17) காலை 6 மணி அளவில் பதவியா நீர்த் தேக்கத்தின் இரண்டு கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யான்ஓயா நீர் தேக்கத்தின் ஐந்து கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. மூன்று கதவுகள் 450 மில்லி மீற்றிலும், இரண்டு கதவுகள் 200 மில்லி மீற்றரிலும் திறக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக அடைமழை பெய்து வருகின்றது. மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் சில இடங்களில் தாழ்நிலங்களில் மழை நீர் தேங்கி நிற்கின்றன.

திருகோணமலையில் சில வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. சில இடங்களில் மழை நீரை அகற்றும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக ஆறு வான் கதவுகள் திறந்து விடப்பட் டுள்ளன.

இதனால் கந்தளாய் குளத்தை அண்டிய பகுதிகளில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கந்தளாய் குளத்தின் வான் கதவு திறந்து இருப்பதன் காரணத்தால் தம்பலகாமம், முள்ளிப் பொத்தானை முதலான பிரதேசங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சீரற்ற காலநிலை காரணமாகப் பெரும்பாலான மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.




# அட்டாளைச்சேனை ஆஸ்பத்திரிக்கு சக்கர நாற்காலி ஒன்று அன்பளிப்பு

(கே. எ. ஹமீட்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் 1996 ஆம் ஆண்டு சாதாரண தரம் கல்வி கற்ற மாணவ நண்பர்கள் குழாமால் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி வழங்கிவைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் நீண்டகாலத் தேவையாக இருந்து, வைத்தியசாலையின் நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு இந்தச் சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர், அல்–ஹாபிழ் யு.எல்.எம். வபாவிடம் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் மாணவ நண்பர்கள் குழாத்தின் தலைவர் தாதிய உத்தியோகத்தர் எம்.எல்.ஜெசீல், செயலாளர் எஸ்.எம்.சித்தீக் மற்றும் முன்னாள் தலைவரும், அதிபருமான ஏ.எம். மிஸ்வர், ஆசிரியர் கே.எல்.எம்.முனாஸ், முன்னாள் செயலாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எம். நபீஸ்தீன், சஷா நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளரும் உறுப்பினருமான எஸ். அஜ்வர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# ரோட்டரிக் கழகக் குழு வடக்குக்கு!



ரோட்டரிக் கழக பிரமுகர்கள் அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு மூன்று நாள்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ரோட்டரி மாவட்ட ஆளுநர் ரோட்டரியன் ஜெரோம் ராஜேந்திரம், இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான உதவி மாவட்ட ஆளுநர் ஜோய் பிஜசீலன் மற்றும் ரோட்டரி மாவட்டத்தின் செயலாளர் ரோட்டரியன் ரமணா ஆகியோர் வடக்குக்கான விஜயத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த உத்தியோக பூர்வ விஜயத்தின் போது சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம், நல்லூர், மன்னார் மற்றும் கிளிநொச்சி நகர் ரோட்டரிக் கழகங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்துடனான சந்திப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை ரோட்டரியன் தேவறூபன் தலைமையில் சுன்னாகம் கஜா விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.



# தேசிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி மாநாடு!

(எஸ்.அஷ்ரப்கான்)

தேசிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி மாநாடு கல்முனை தொகுதி செயற்பாட்டாளர் ஆசிரியர் ஏ.ஆதம் பாவா தலைமையில் நேற்றுமுன்தினம் (15) மாலை கல்முனை கடற்கரை வெளியில் இடம்பெற்றது.

இங்கு பிரதம பேச்சாளராக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டார். தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினர்களான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் மௌலவி முனீர் முனவ்வர் ஆகியோரும் விசேட உரையாற்றினர்.

இங்கு தேசிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி உறுப்பினர்கள் பொதுமக்களும் கொட்டும் மழையிலும் கலந்து கொண்டனர்.



# பதில் செயலாளராக சிவலிங்கம் நியமனம்

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரி எந்திரி நடராஜா சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைதீவைச் சேர்ந்த இவர் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளராக சேவையாற்றி வந்த நிலையில் இந்த நியமனம் கிடைத்துள்ளது.

சிறந்த நிர்வாகியான பொறியியலாளர் சிவலிங்கம் ஏலவே கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை ஆணையாளராகவும் கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்வி பணிப்பாளருமாக பணியாற்றியிருந்தார்.






# மன்னார் பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதி மூடப்படும் அவலம்!

(மன்னார் நிருபர்)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பு காரணமாக மன்னார் நகர சபைக்கு சொந்தமான பாப்பாமோட்டை பகுதியில் அமைந்துள்ள திண்ம கழிவு முகாமைத்துவ நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இதனால் நகர சபையால் திண்மக் கழிவு மற்றும் மலக்கழிவு அகற்றல் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் பல நாட்களாக மருத்துவக்கழிவு, உணவுக்கழிவு மற்றும் மலக்கழிவுகள் அகற்றப்படாது உள்ளன.

இதனால் மன்னார் பொது வைத்தியசாலைக்கு உரிய பிராந்திய சுகாதார கழிவகற்றல் நிலையம் சுகாதார சீர்கேட்டுக்கு உள்ளாகியுள்ளது. துர்நாற்றமும் வீசிவருகிறது.

அதேநேரம் நோயாளர் விடுதிகளில் உள்ள மலசல கூடங்கள் நிறைந்து வழிவதால் விடுதிகளை நோயாளிகள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. மழை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகக் கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் விடுதிகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே சேகரிக்கப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்ட குப்பைகளால் தொற்று நோய்கள் ஏற்படும் நிலையும் உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை நிர்வாகத்தால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

எனினும் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில்வைத்தியசாலைக்கு நிரந்தர பணிப்பாளர் இல்லாமையும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலை மாத்திரமின்றி பொது இடங்கள, வீடுகள், அலுவலகங்கள் உணவங்களிலும் குப்பைகள், கழிவுகள் அகற்றப்படாத நிலையே காணப்படுகின்றது.,

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், ஆளுநர் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மன்னார் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# காலி முஸ்லிம் கலாச்சார சங்கத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

**(அஷ்ரப் ஏ சமத்)**

காலி முஸ்லிம் கலாச்சார சங்கத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு வெள்ளவததை மெரைன் ரைவ் விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி, அலி சாஹிர் மௌலானா, மற்றும் இந்த அமைப்பின் தலைவர் லாபிர் ஹரீம், மற்றும் ஆலோசகர் ஹனீப் சூசுப், இல்யாஸ் கரீம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அத்துடன் காலி நகரில் இந்தச் சங்கம் கடந்த 60 வருட காலமாகக் சகல சமூகங்களையும் இணைத்து செயல்படுகின்றது. சமூக சேவைகள் மற்றும் அகதியா பாடசாலைகள், இரண்டு பள்ளிவாசல் போன்ற திட்டங்களை சிக்காப் இஸ்மாயில் நிகழ்வில் விளக்கமளித்துக் கூறினார்.

அத்துடன் அகதியா பாடசாலை மாணவர்கள் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. காலி பள்ளிவாசல்கள் பிரதான நம்பிக்கையாளர்கள் அல்ஹாஜ் ரவுப் மற்றும் இஸ்மத் மொஹமட் ஆகியோர் சேவையைப் பாரட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.



# விஞ்ஞான வினாடி வினா போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாமிடம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

களுவாஞ்சிகுடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் தேசிய ரீதியில் யாழ். பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் கலந்துகொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும், பகுதித் தலைவர்களுக்கும் பாடசாலை அதிபர் ரீ.பார்த்திபன் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.





# சம்மாந்துறைக்கு விஜயம் செய்த கிழக்கு கல்வி மதிப்பீட்டு குழு!

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலை மதிப்பீட்டு குழுவினர் சம்மாந்துறை வலயத்தில் உள்ள அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்தனர்.

கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எம். எம்.ஜவாத் தலைமையிலான குழுவினர் இந்த விஜயத்தின் பொழுது கலந்து கொண்டனர்.

அதேவேளை, சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையிலான கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை அங்கு கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஏனைய பண்புத்தர சுட்டிகள் தொடர்பிலான மதிப்பீடுகளும் நடைபெற்றன.

பின்னர் அதிபர் ஆசிரியர்கள் உடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

பாடசாலை தொடர்பான சாதக பாதக விடயங்களை அதிகாரிகள் சுட்டிக் காட்டியதுடன் பரிகார செயன்முறைகளையும் விதந்துரைத்தனர்.

அவற்றை நிவர்த்தி செய்வதற்காகப் பாடரீதியாக குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.





# கல்முனை ஆஸ்பத்திரியில் ஒளி விழா!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வருடாந்த ஒளி விழா வைத்தியசாலையின் சுகநல சேவை கிறிஸ்தவ ஐக்கிய அங்கத்தவர்களின் ஏற்பாட்டில் வைத்தியசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நேற்று (16) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர். கிறீஸ் நவரெட்ணராஜா, சிறப்பு விருந்தினராக வைத்தியர் டாக்டர். ரேனுகா அருள்தாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.என். றொஷாந்த் வழங்கினார். தொடர்ந்து பாடல்கள், நடன நிகழ்வுகள், கவிதை போன்றன அரங்கேற்றப்பட்டன. மேலும் சிறுவர்களுக்கான பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர்களான டாக்டர் ஜே. மதன் மற்றும் டாக்டர் சா. இராஜேந்திரன் , கணக்காளர் எம். கேந்திரமூர்த்தி, தாதிய பரிபாலகர் என். சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி. எல்.சுஜேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள், பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி. ரோஸி சுகுமார், வைத்திய அதிகாரிகள் மற்றும் ஏனைய வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.







# கற்பிட்டி றோ.கவில் ஒளிவிழா








(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், கற்பிட்டி நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த ஒளி விழா நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (15) அதிபர் பீ.ஜெனற்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

தேத்தாப்பளைப் பங்கின் அருட் சகோதரர் அருட்பணி பிரசங்க அடிகளார், புத்தளம் சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி ஜெனற் றொற்றிக்கோ பிள்ளை, புத்தளம் வலய கல்வி பணிமனையின் பணிப்பாளர் ஏ.எச்.எம். அர்ஜுனா, புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் கல்வி நிர்வாகப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சீ.ஐ. சுஜீவிகா, கணக்காளர் டபிள்யூ. ஏ.எம்.பீ.கே.எல்.வணசிங்க, ஆரம்ப பிரிவு பாட இணைப்பாளர் வீ.அருணாகரன், அயல் பாடசாலை அதிபர்கள், பிரதேச கல்வி சார், கல்வி சாரா ஊழியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் போது 'நறுமணம்' சஞ்சிகையின் இதழ் 4 அதிபரால் வெளியிடப்பட்டது. அதற்கான நூல் ஆய்வு புத்தளம் பாத்திமா பாலிகா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி யோகேஸ்வரி அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் தரம் 5 புலைமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.




# மரணமடைந்த இரு சிறுவர்களின் விசாரணை அறிக்கைகள் ஆராய்வு!

கல்முனை பிராந்தியத்தில் இரு சிறுவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மரணமடைந்துள்ளனர். இந்தச் சிறுவர்களின் விசாரணை அறிக்கைகள் ஆராயப்பட்டுள்ளன.

இதற்கமைய இரு மரணங்கள் தொடர்பில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோகண தலைமையில் விசாரணை முன்னேற்றம் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ உட்பட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம். என்.ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக உட்பட மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு உயரதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரிடம் பல்வேறு விசாரணை அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.

இருவரதும் விசாரணை முன்னெடுப்புக்களை கவனமெடுத்த கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோகண மேலதிக புலன் விசாரணை மேற்கொள்வதற்காக ஆலோசனைகளை பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

# வழுக்கி விழுந்த நபர் மரணம் சடலம் கிளங்கன் ஆஸ்பத்திரியில்

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை ஸ்ரஸ்பி தோட்டகுமரி பிரிவில் கனத்த மழையின் போது பாலத்தின் வழியாக செல்லும் வேளையில் வழுக்கி விழுந்த நபர் உயிரிழந்தார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் 62 வயது உடைய சிவனு ராஜேந்திரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லபட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# மத்திய மலைநாட்டில் தொடர் மழையால் காசல்ரீ நீர் தேக்க வான் கதவுகள் திறப்பு!

**(மஸ்கெலியா நிருபர்)**

காசல்ரீ, விமலசுரேந்திர, கென்யோன் ஆகிய மூன்று நீர் தேக்கங்களின் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று நீர் மின் நிலைய அதிகாரி மற்றும் நுவரெலியா மாவட்ட அரச அதிபர் நந்தன கலபட ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இன்று காலை 8 மணிக்கு பின்னர் மத்திய மலைநாட்டில் சற்று மழை ஓய்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# வருடாந்த டெங்கு ஒழிப்பும் விழிப்புணர்வு நிகழ்வும்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு மற்றும் பூச்சியியல் ஆய்வு கூடம் 15 பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை ஜமாஅதே இஸ்லாமி கல்முனை கிளையின் தலைவர் எஸ்.எல்.எம்.கரீம் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர் இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்து ஆலயங்களது முக்கிய பிரமுகர்கள், பள்ளிவாசலின் முக்கிய பிரதிநிதிகள், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கல்முனை மாநகர சபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மஹல்லாவிலுள்ள அனைத்து தமிழ் முஸ்லிம் வீடுகளுக்கும் தொண்டர்கள் சென்று வீடுகளின் உள்பகுதி உட்பட சுற்றுப் புறங்களையும் பரிசோதனை செய்து டெங்கு தொடர்பான விழிப்புணர்வை வழங்கினர். டெங்கு நுளம்பு பெருகும் பொருள்களை வீட்டிலுள்ளவர்களின் துணையுடன் அகற்றி மாநகர சபை வாகனங்களில் ஒப்படைத்தனர்.

பொது அமைப்புக்களின் ஒத்துழைப்பு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருந்தால் தொண்டர்களின் கள செயற்பாடு ஹைறாத் பள்ளிவாசல் மஹல்லாவின் எல்லையை தான்டி ஏனைய பள்ளிவாசல்களின் மஹல்லா எல்லை வரை விரிவடைந்து சென்றது.

இந்த வேலைத் திட்டத்தை முன்னிட்டு தொண்டர்களுக்கு டெங்கு நோய், அதனை பரப்பும் நுளம்பின் வாழ்க்கை மற்றும் வாழ்விடம், வாழ்விடங்களை அகற்றும் வழிமுறை, களவேலையின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு பள்ளிவாசலில் நடைபெற்றது.





# மன்னார் மாந்தை மேற்கில் 438 பேர் இடம் பெயர்வு

(ந.லோகதயாளன்.)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேவன்பிட்டி, பாலியாறு கிராமங்களில் 131 குடும்பங்களை சேர்ந்த 438 பேர் இடம் பெயர்ந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் யாழ்ப்பாணம் ஏ-32 வீதியில் காணப்படும் பாலியாறு பெருக்கெடுத்ததன் காரணமாக தேவன் பிட்டி கிராமத்துக்கு நீர் உட்புகுந்துள்ளது.

இதன் காரணமாக இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவை மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வழங்கி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் பெரும்பாலான தாழ் நிலப் பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்துக்கு உள்ளாகுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர்கே.திலீபன்தெரிவித்துள்ளார்.

பாலியாறு, பறங்கியாறு நீர் மட்டம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மன்னார் -யாழ்ப்பாணம் (ஏ-32) பிரதான வீதி வெள்ள நீரில் மூழ்கும் வாய்ப்பு உள்ளது. அவ் வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் மிகவும் அவதானத்துடன் பயணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.



# கிண்ணியா மீனவர்களது பிரச்சினைகள் ஆராய்வு!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கிண்ணியா மீனவர்கள் கடற்றொழி லில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் றிஸாத் பதியுதீனுடன் கலந்துரையாடப் பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன், கிண்ணியா அண ணல் நகர் அல்-ஹிதாயா மீனவர் கூட் டுறவுச் சங்க மீனவர்களுடன் அவர்கள் கடற்தொழிலில் எதிர்நோக்கும் பிரச்சி னைகள்சம்மந்தமாககலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் முன்னால் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்றூப், அதிபர் எம்.எஸ்.ஏ. அப்துல் அஸீஸ் மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினர் நிஸ ார்தீன் முஹம்மட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் மக்களைப் பாதிக்கும் வகையில் தேங்கி நிக்கும் வெள்ளத்தை வெளியேற்றுக!

## வடமாகாண ஆளுநர் உத்தரவு

(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் மக்களை பாதிக்கும் வகையில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை வெளியேற்ற உள்ளூராட்சி மன் றங்கள் உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் உத்தரவு பிறப்பித் துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பருவமழை காரணமாக வடக்கு மாகாணத்தின் நிலைப்பாடு தொடர்பில் 5 மாவட்டங்க ளின் ஒருங்கிணைப்புக் குழுத் தலை வர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

அதற்கு அமைவாக வவுனியா




மாவட்டத்தின் நிலைப்பாடு தொடர்பில் வடமாகாண ஆளுனரால் மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தேங்கி நிற்கும் நீரைச் சுத்தப்படுத்தும் பணியை உள்ளூராட்சி திணைக்களம் மேற் கொள்ள வேண்டும்.

நீர் வழிந்தோடாத வகையில் அனு மதியின்றி வேலி சுவர்கள் அமைக்கப்பட் டிருப்பின் உள்ளூராட்சி அலுவலக உத் தியோகத்தர்களால் துளையிடப்பட்டு நீரை வெளியேற்றுமாறும் குறிப்பிட் டுள்ளது. இதன்போது குறிப்பிட்ட பகுதிகளின் கிராம அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளையும் சம்பவ இடங்க ளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# கடலாமை இறைச்சியை வைத்திருந்தவர் கைது!

## பாணந்துறை குற்றத்தடுப்பு பொலிஸார் நடவடிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடலாமை இறைச்சியைத் தன்வசம் வைத்திருந்த மீனவரொருவரை 10 கிலோ ஆமை இறைச்சியுடனும், 80 ஆமை முட்டைகளுடனும் பாணந்துறை குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வாதுவ உல்லாச விடுதிக்கு பின்புறமாக மிகவும் சூட்சிதமான முறையில் இவை ஒழித்து வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

அரிய கடல்வாழ் அரிய உயிரினத் தைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் வாதுவ தம்பியகம பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய மீனவர் பொலி



ஸாரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

# மகாராஷ்டிரா வெடிமருந்து நிறுவனத்தில் விபத்து: 9 பேர் பலி, 3 பேர் படுகாயம்!

மாகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள பஜார்கான் கிராமத்தில் செயல் பட்டுவரும் வெடிமருந்து தயாரிக்கும் நிறுவனத்தில் இன்று ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள் ளனர். 3 பேர் காயமடைந்துள்ளனர்.

வெடிவிபத்து இடம்பெற்ற பகுதியில் சம்பவத்தின் போது 12 பேர் பணியில் இருந்துள்ளனர். சம்பவம் குறித்து கேள் விப்பட்டதும் பொலிஸார் அங்கு விரைந்து சென்றுள்ளனர்.

வெடிவிபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# கொரோன பரிசோதனை அதிகரிப்பு: தமிழக சுகாதார அமைச்சர் தகவல்!



தமிழகத்தில் கொரோன பரிசோத னைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்துள்ளார்.

டெங்கு உள்ளிட்ட மழைக்கால நோய்களுக்காக தமிழகம் முழுவதும் வாரம்தோறும் சனிக் கிழமையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மழைக்கால மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், 8 ஆவது வாரமாக தமிழகம் முழுவதும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் நேற்றும் முகாம்கள் நடைபெற்றன. சென்னை அடையாறு மண்டலம், வேளச்சேரி 100 அடிசாலை, சசி நகரில் நடைபெற்ற முகாமை அமைச் சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத் தார்.

இதன்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், "மழைக்கால மருத்துவ முகாம்களில் 9 மாதம் தொடங்கி 15 வயது வரை உள்ளசிறார்களுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடும் பணியும் நடைபெறுகிறது.

குறிப்பாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு உள்ளான பகுதிகளில் ரூபெல்லா தடுப்பூசி போடும் பணிகள் விரிவுபடுத்தப்பட்டு உள்ளன.

கேரளாவில் கொரோனா தொற்று பாதிப்பு அதிகரித்துள்ளது. பாதிக்கப் பட்டவர்கள் 4 நாட்களிலேயே சரியாகி விடுகின்றனர்.

தமிழகத்தில் கொரோனா தொற்று பரவல் கண்காணிக்கப்பட்டு வரு கிறது. காய்ச்சல் பாதிப்புகள் அதிகம் உள்ள பகுதிகளில் ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோத னைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

கடந்த 4 மாதங்களாக குறைந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த பரிசோதனைகள் தற்போது அதிகரிக் கப்பட்டுள்ளது. சபரிமலைக்கு செல்பவர் கள் அனைவரும் பரிசோதனை செய்யப் பட வேண்டிய அவசியம் இல்லை. அதுபோன்ற பதற்றமான சூழல் ஏற்பட வில்லை." என்று தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடி ஓமன் மன்னருடன் சந்திப்பு: இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை!

உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு இந்தியா சென்றுள்ள ஓமன் மன்னர் ஹைதம் பின் தாரிக்கை பிரதமர் நரேந்திர மோடி நேற்று வரவேற்று விருந்தளித்தார்.

வர்த்தகம், முதலீடு உள்ளிட்டவை தொடர்பாக இருதரப்பு உறவை விரிவு படுத்துவது தொடர்பாக அவர்கள் இரு வரும் கலந்துரையாடினர்.

ஹைதம் பின் தாரிக் ஓமன் நாட்டு மன்னராகவும், பிரதமராகவும் 2020 ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். இந்த நிலையில், அவர் 3 நாள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா சென்றுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அவர் டில்லிக்கு சென்றடைந்தார். அவரை விமான நிலையத்தில் மத்திய வெளியுறவுத்துறை



இணையமைச்சர் வரவேற்றார்.

நேற்று காலை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு சென்ற ஹைதம் பின் தாரிக்கை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவும் பிரதமர் நரேந்திர மோடியும் வரவேற்றனர்.

அவருக்கு இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. ஓமன் பிரதமராக ஹைதம் பின் தாரிக் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

இந்நிலையில், அவரை வரவேற்ற பிரதமர் மோடி, "இந்தியா - ஓமன் உற வில் ஒரு வரலாற்று தருணம் இது. 26 ஆண்டுகளுக்குப் பிறகு ஓமன் சுல்தான் இந்தியாவுக்கு வருகை தருகிறார். இந்திய மக்கள் சார்பாக நான் அவரை வரவேற்கிறேன்" என்றார்.

டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் மோடியும் ஹைதம் பின் தாரிக்கும் கலந்துரையாடினர். இருநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவை விரிவுபடுத்துவது தொடர்பாக இருவரும் உரையாடினர் என வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி தெரிவித்துள்ளார்.

# ஒரு வாரத்தில் பல்லாயிரம் வீரர்களை இழந்தது ரஷ்யா!



ஒரு வருடத்திற்கும் மேலாக உக்ரைன் ரஷ்யப்போர் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில், கடந்த வாரத்தில் மட்டும் 6 ஆயிரத்து 700 இராணுவ வீரர்களை ரஷ்யா இழந்துள்ளது என உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கை 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதியில் தொடங்கி இடைவிடாமல் தாக்குதல் நடைபெற்று வரும் நிலையில், இதில் லட்சக்கணக்கான இராணுவ வீரர்கள் மற்றும் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று உக்ரைன் ஆயுதப் படையின் ஜெனரல் வெளியிட்ட தகவலில், ரஷ்யா கடந்த 7 நாட்களில் மட்டும் 6 ஆயிரத்து 700 இராணுவ வீரர்களை இழந்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினத்தில் மாத்திரம் 930 இராணுவ வீரர்களை இழந்து இருப்பதாகவும், இந்த வாரத்தில் உள்ள 3 நாட்களில் ரஷ்யா 1000க்கும் அதிகமான வீரர்களை இழந்து இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனுடன் ரஷ்யா 88 டாங்கிகளையும் இழந்து இருப்பதாகவும், போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 5,720 டாங்கிகளை ரஷ்யா இழந்து இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

ஆனால் உக்ரைனின் புள்ளி விவரங்கள் மற்ற மதிப்பீடுகளை விட அதிகமாக இருப்பதால் ரஷ்ய வீரர்கள் இழப்பினை சரியாக கணக்கிடுவது கடினமாக உள்ளது.

கடந்த ஒக்டோபரில் பிரித்தானிய பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கிய தகவலில், 1,90, 000 வீரர்களை ரஷ்ய இராணுவ இழந்து இருப்பதாக தெரிவித்து இருந்தது.

இதனை தொடர்ந்து டிசம்பர் 12 ஆம் திகதி அமெரிக்க உளவுத்துறை வெளியிட்ட அறிக்கையில் ரஷ்யா 3 லட்சத்து 60 ஆயிரம் வீரர்களை இழந்து இருப்பதாக தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனுக்கான நிதியுதவியை இறுதிநேரத்தில் முடக்கிய ஹங்கேரி

உக்ரைனுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அளிப்பதாக இருந்த பல பில்லியன் யூரோ நிதியுதவியை ஹங்கேரி தடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் உக்ரைனுடன் உறுப்பினர் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடிவு செய்த சிறிது நேரத்திலேயே ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பன் அந்த நாட்டுக்கான நிதியுதவி தொடர்பான தடையை அறிவித்தார்.

அதுமட்டுமின்றி, ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைனை இணைத்துக் கொள்வதில் ஆரம்பம் முதலே ஹங்கேரி எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ஆனால் இதுவரை உக்ரைன் முன்னெடுக்கும்



முயற்சிகளை தடுக்கவில்லை என்றே கூறப்படுகிறது.

உக்ரைனுக்கு வழங்குவதாக உறுதி அளித்திருந்த 50 பில்லியன் யூரோ தொகை தொடர்பில் 26 நாடுகள் ஒப்புக்கொண்ட பின்னர் ஹங்கேரி பிரதமரால் அதை முறியடிக்க முடியாது என்றே நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த உதவிப் பேச்சுவார்த்தை அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக 61 பில்லியன் டொலர் மதிப்பிலான அமெரிக்க இராணுவ தளபாட உதவி தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதி ஒப்புதல் கோரியிருந்தார். ஆனால் ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்ட பெரும் கருத்து வேறுபாடுகள் காரணமாக அந்த முடிவும் தாமதமாகி வருகிறது.

## 33 நாடுகளுக்கு இனி விசா தேவையில்லை: ஈரான் அறிவிப்பு

இந்தியா உள்ளிட்ட 33 நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் ஈரான் வருவதற்கு இனி விசா தேவையில்லை என ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

சுற்றுலா துறையை மேம்படுத்தவும், சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் அந்நாட்டு அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஈரானின் சுற்றுலா துறையை மேம்படுத்தவும், சுற்றுலா பயணிகளின் வருகையை ஊக்கப்படுத்தவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இந்தியா உள்ளிட்ட 33 நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் ஈரான் வருவதற்கு இனி விசா தேவையில்லை என சுற்றுலாத் ஈரான் துறை அமைச்சர் எஸதுல்லாஹ் சர்காமி தெரிவித்துள்ளார்.